RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 77 | மார்ச்.26 2026 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# "திமுக 175 தொகுதிகளில் உதய சூரியன் சின்னத்தில் போட்டி" மு.க.ஸ்டாலின்

## "சதி எண்ணங்கள் தவிடுபொடி" என தொண்டர்களுக்கு மடல்

சென்னை: மார்ச்.26-

"2026 சட்டப்பேரவைத் தேர்தல் களத்தில், 175 இடங்களில் உதயசூரியன் களம் காண்கிறது. திமுக கூட்டணியில் ஏதாவது விரிசல் ஏற்படாதா, பிளவு உருவாகாதா என நினைத்த சதிகாரர்களின் எண்ணங்கள் தவிடுபொடியானது.

உதயசூரியனும் நமது சின்னம்தான். கை, முரசு, கதிர் அரிவாள், அரிவாள் சுத்தி நட்சத்திரம், பானை, ஏணி ஆகியவையும் நமது சின்னங்கள்தான். 234 தொகுதிகளும் நம்முடைய தொகுதிகள்தான். தோழமைக் கட்சிகளுடன் இணைந்து நின்று, விரைந்து பணியாற்றுவீர். கவனம் சிதறாது இலக்கை வெல்வோம்" என திமுக தொண்டர்களுக்கு மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் எழுதியுள்ள கடிதத்தில், "பத்தாண்டுகால படுமோசமான அதிமுக ஆட்சியினால் தமிழ்நாட்டின் அனைத்துத் துறைகளிலும் ஏற்பட்ட சீரழிவுகளைச் சரிசெய்து, கடந்த ஐந்தாண்டுகால திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டின் வளர்ச்சியை இந்திய அளவில் உயர்த்திக் காட்டியிருக்கிறோம். இந்தப் பெரும் முயற்சிக்கும் சாதனைக்கும் துணை நின்ற கொள்கைவழித் தோழமை இயக்கத்தினரின் பங்களிப்பு மிக மிக முக்கியமானது. அதனை மதித்து உணர்ந்தே இந்த முறையும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தொகுதிப் பங்கீட்டுப் பேச்சுவார்த்தைகள் ஜனநாயகப்பூர்வமாக நடைபெற்றன.

நமது கூட்டணியில் புதிய கட்சிகள் இணைந்துள்ள காரணத்தால், உரிய அளவில் தொகுதிகளைப் பங்கிட்டுக் கொள்ள வேண்டிய சூழலும் தேவையும் இருப்பதை நம்முடன் தொடர்ந்து பயணிக்கும் தோழமைக் கட்சிகளான விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, மதிமுக, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் உள்ளிட்ட அனைத்து இயக்கங்களின் தலைவர்களுடனும் ஆலோசித்தே தொகுதிப் பங்கீட்டுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று, ஒப்பந்தங்கள் நிறைவேறியுள்ளன.

கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்களிடமும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் சகோதரர் தொல். திருமாவளவன் எம்.பி, மதிமுக பொதுச்செயலாளர் அண்ணன் வைகோ மற்ற இயக்கத் தலைவர்களிடமும் தொகுதிப் பங்கீட்டு நிலவரங்களை உங்களில் ஒருவனான நான் நேரில் விளக்கினேன். அவர்கள் எதிர்பார்க்கின்ற எண்ணிக்கையில் உள்ள நியாயத்தை மதித்து, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி மகத்தான வெற்றி பெறுவதற்கேற்ப எண்ணிக்கையை நிர்ணயிக்க வேண்டிய சூழல் இருப்பதையும் அவர்களிடம் விளக்கமாகச் சொன்னேன்.

எப்போதும் என் மீது அன்பும், திராவிட மாடல் ஆட்சி தொடர வேண்டும் என்ற உறுதியும் கொண்ட நமது தோழமை இயக்கத் தலைவர்களும், தங்கள் இயக்க நிர்வாகிகளுடன் தொடர்ந்து ஆலோசித்து, உரிய அவகாசம் எடுத்துக்கொண்டு, பல சுற்று



பேச்சுவார்த்தைகளுக்குப் பின் மனப்பூர்வமாக எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில்தான் தொகுதிப் பங்கீட்டு ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. கூட்டணியின் தலைவர் என்ற முறையில் தோழமைக் கட்சிகளை நம்முடைய அங்கமாகத்தான் பார்க்கிறேன். அவர்களுக்கான தொகுதிகளில் முழுமையான வெற்றியை உறுதி செய்ய அவர்களின் சகோதரனாக என் உத்தரவாதத்தையும் வழங்கியிருக்கிறேன்.

தேர்தல் களத்தில் ஒவ்வொரு அரசியல் கட்சியும் தங்களுக்குத் தேவைப்படும் தொகுதிகளை உரிமையுடன் கேட்பதும், அவற்றைப் பரிசீலித்து எந்தளவுக்கு வழங்க முடியுமோ அவற்றை வழங்குவதும் கூட்டணிக்கான நடைமுறையாகும். அதனை ஜனநாயகத்தன்மையுடன் நிறைவேற்றியிருக்கிறது தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி.

கழகக் கூட்டணியின் வெற்றியே பெரிது என்பதை எடுத்துரைத்து மக்கள் நீதி மய்யத்தின் தலைவரான நண்பர் கமல்ஹாசன் எம்.பி., தனது மனம் திறந்து வெளியிட்டிருக்கும் அறிக்கையை மனதார வரவேற்கிறேன். அதுபோலவே விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சிகள், மதிமுக உள்ளிட்ட தோழமைக் கட்சித் தலைவர்களும் மனப்பூர்வமாகத் தெரிவித்திருக்கும் கருத்துகள், 2019 முதல் தொடர்ந்திடும் நமது கூட்டணியின் வலிமைக்குச் சான்றாகும்.

தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய பாஜக அரசின் மதவாத அரசியலைத் துணிவுடன் எதிர்த்து நிற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தோளோடு தோள் நிற்பவை நம் தோழமை இயக்கங்கள். மதச்சார்பின்மை மாநில உரிமை ரூ சமூகநீதி சமத்துவம் இவற்றை அடித்தளமாகக் கொண்ட கொள்கைக் கூட்டணிதான் நம்முடையது.

அதில் ஏதாவது விரிசல் ஏற்படாதா, பிளவு உருவாகாதா, திமுக கூட்டணியின் வெற்றியைத் தடுத்திட வழி ஏற்படாதா என நினைத்த சதிகாரர்களின் எண்ணங்கள் தவிடுபொடியானதால், திமுக கூட்டணியின் தொகுதிப் பங்கீடு குறித்து தங்கள் கற்பனைக்கேற்ப விமர்சனங்களைப் பரப்பிட முயற்சி செய்கிறார்கள். திசைதிருப்ப நினைக்கும் வதந்திகளை உடன்பிறப்புகள் கண்டுகொள்ளாமல் புறக்கணித்து, தோழமைக் கட்சியினருடன் இணைந்து களத்தில் பணியாற்றி, வெற்றியை உறுதி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதிப் பங்கீட்டுப் பேச்சுவார்த்தைகளைக் கழகத்தின் சார்பில் அமைக்கப்பட்ட குழு நடத்தி வந்த நிலையில், தி.மு.க.வின் சார்பில் தேர்தல் களத்தில் போட்டியிட விருப்பமனு அளித்திருந்த ஆயிரக்கணக்கான உடன்பிறப்புகளை ஒவ்வொரு நாளும் சந்தித்து, நேர்காணலையும் நடத்தி முடித்திருக்கிறேன். மார்ச் 17 ஆம் தேதி தொடங்கி, 23ஆம் தேதி வரை, இடையில் ரமலான் திருநாள் விடுமுறை தவிர்த்து, 6 நாட்கள் இந்த நேர்காணல் நடைபெற்றுள்ளது.

கழகத்தின் நேர்காணல் என்பது தலைமைக்கும் தொண்டர்களுக்குமான உறவின் வெளிப்பாடு. அதுவும் இந்த முறை 16 ஆயிரத்து 500 உடன்பிறப்புகள் கலந்துகொண்ட கொள்கை உறவுத் திருவிழா. மாரத்தான் ஓட்டத்தைப்போல ஒவ்வொரு நாளும் 10 மணிநேரத்திற்குக் குறையாமல் நேர்காணல் நடைபெற்றது. விருப்பமனு அளித்த உடன்பிறப்புகளின் முகம் கண்டபோது எனக்குள் ஏற்பட்ட உற்சாகத்தினால் அடுத்தடுத்த நாட்களும் தொடர்ந்து ஊக்கமுடன் பணியாற்ற முடிந்தது.

உடன்பிறப்புகளின் உழைப்பையும் அனுபவத்தையும் மதித்து உங்களில் ஒருவனான நான் நேர்காணல் நடத்தினேன். திராவிட மாடல் அரசின் சாதனைகள் மக்களிடம் ஏற்படுத்தியிருக்கும் நல்விளைவுகள், அதனால் பெருகியிருக்கும் பொதுமக்களின் ஆதரவு, தோழமைக் கட்சிகளின் பலம், கழக நிர்வாகிகளின் ஒருங்கிணைந்த பணி இவை குறித்து அவர்களிடம் கேட்டறிந்தேன். உடன்பிறப்புகள் தந்த உறுதியில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. தமிழ்நாட்டு மக்களிடமும் தி.மு.க தலைமையிலான கூட்டணிக்குப் பெரும் செல்வாக்கு இருக்கிறது.

நம்பிக்கையும் செல்வாக்கும் வெற்றியாக விளைவதற்கு நாம் அடுத்த 4 வாரங்களும் அயராமல் உழைத்திட வேண்டும். மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தொகுதிப் பங்கீட்டு நிறைவில், தங்கள் கட்சி சின்னத்தில் போட்டியிடும் தோழமைக் கட்சிகளின் தொகுதிகள் போக, தி.மு.க வேட்பாளர்கள் மற்றும் தி.மு.க. சின்னத்தில் போட்டியிடும் தோழமைக் கட்சி வேட்பாளர்களுமாக இணைந்து 2026 சட்டமன்றத் தேர்தல் களத்தில், 175 இடங்களில் உதயசூரியன் களம் காண்கிறது.

உதயசூரியனும் நமது சின்னம்தான். கை, முரசு, கதிர் அரிவாள், அரிவாள் சுத்தி நட்சத்திரம், பானை, ஏணி ஆகியவையும் நமது சின்னங்கள்தான். 234 தொகுதிகளும் நம்முடைய தொகுதிகள்தான். மதவாத அரசியலையும், தமிழ்நாட்டை வஞ்சிக்கும் துரோகத்தையும் எதிர்த்து நின்று, எல்லார்க்கும் எல்லாம் என்கிற ஆட்சி தொடர்ந்திடவும், இந்தியாவின் ஜனநாயகத்தைக் காத்திடவும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கான வெற்றிக் களத்தில் தோழமைக் கட்சிகளுடன் இணைந்து நின்று, விரைந்து பணியாற்றுவீர். கவனம் சிதறாது இலக்கை வெல்வோம்!" என்று அவர் தெரிவித்துள்ளார்.

# சிகிச்சைக்கு பணம் கொண்டு சென்றால் வாட்ஸ்அப் ஆதாரம் போதும்

## அர்ச்சனா பட்நாயக் அறிவிப்பு



சென்னை, மார்ச்.26-

தமிழ்நாட்டில் ஒரே கட்டமாக ஏப்ரல் 23ந் தேதி சட்டசபை தேர்தல் நடக்கிறது. வேட்புமனு தாக்கல் வருகிற 30ந் தேதி தொடங்குகிறது. ஓட்டு எண்ணிக்கை மே 4ந் தேதி நடக்கிறது. தேர்தல் நடத்தை விதிகள் அமலானதை தொடர்ந்து வாகன சோதனை கள் தமிழகம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருக்கும்போது அரசு, அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள், பொதுமக்கள் ஆகியோரின் அனைத்து நடவடிக்கைகளிலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

அதன்படி பொதுமக்கள் யாரும் தேர்தல் நடவடிக்கைகள் முடியும்வரை அதாவது வரும் மே 6ந் தேதிவரை தனிநபராக ரூ.50 ஆயிரத்துக்கு மேல் தொகையை எடுத்துச் செல்ல முடியாது. அப்படி கொண்டு செல்வதாக இருந்தால், அதற்கான ஆதாரங்களை கையில் வைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் பறக்கும்படையினர் அந்தத் தொகையை பறிமுதல் செய்து வருகின்றனர்.

நேற்று காலை வரை உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு செல்லப்பட்ட ரூ.151.93 கோடி மதிப்பிலான ரொக்கம் மற்றும் தங்கம், வெள்ளி, இலவச பொருட்கள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டு உள்ளன. அவற்றில் தங்கம், வெள்ளி ஆகியவற்றின் மதிப்பு மட்டும் ரூ.92.02 கோடியாகும். ரூ.72 லட்சம் மதிப்புள்ள மதுபானங்களும் பிடிபட்டுள்ளன. தேர்தல் நடத்தை விதிகளால் பணம் கொண்டு செல்வதில் மக்கள் இன்னல்களை சந்தித்து வருகின்றனர்.

இந்த நிலையில், மருத்துவ சிகிச்சைக்கு எடுத்துச்செல்லப்பட்ட பணம் பறிமுதல் செய்யப்பட்டது தொடர்பாக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

மக்களை தொல்லை செய்யக்கூடாது என பறக்கும் படைக்கு அறிவுறுத்தல் அளிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் கொண்டு செல்லும் பணத்தை பறிமுதல் செய்யக்கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மருத்துவக் காரணத்திற்காக பொதுமக்கள் ரூ.50,000க்கு மேல் பணம் எடுத்துச் சென்றால் அதற்கான ஆதாரத்தை வாட்ஸ்அப்பில் கூட காண்பிக்கலாம்; அவ்வாறு காண்பித்தால் பணம் எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படுவர்.

ரூ.50,000க்கு மேல் அனுமதிக்கவேண்டும் என்ற வணிகர்களின் கோரிக்கையை தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளோம். நகர்ப்புற பகுதிகளில் வாக்குப்பதிவை அதிகரிக்க தேர்தல் ஆணையம் பல்வேறு முயற்சிகளை எடுக்கிறது; தமிழகத்தில் எப்போதும் நகர்ப்புறங்களில் வாக்குப்பதிவும் மிகக் குறைவாகவே இருக்கிறது. வெறுப்பு பிரசாரங்களை கண்காணிக்க பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# அதிமுக கூட்டணியில் பாஜக, பாமக, அமமுகவுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகள் எவை? : முழு பட்டியல்

சென்னை: மார்ச்.26-

அதிமுக கூட்டணியில் உள்ள கட்சிகள் போட்டியிடும் தொகுதிகளின் பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.

அதிமுக தலைமை அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், பாமக தலைவர் அன்புமணி, அமமுக பொதுச் செயலாளர் தினகரன், ஐஜேகே தலைவர் பாரிவேந்தர், ஜான்பாண்டியன், பூவை ஜெகன் மூர்த்தி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். இதனைத் தொடர்ந்து கூட்டணிக் கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதிகளின் விவரத்தை எடப்பாடி பழனிசாமி அறிவித்தார்.



பாஜக போட்டியிடும் 27 தொகுதிகள்:

மயிலாப்பூர்
தளி
மொடக்குறிச்சி
உதகமண்டலம்
அவினாசி (தனி)
திருப்பூர் தெற்கு
கோவை வடக்கு
கந்தர்வக்கோட்டை (தனி)
புதுக்கோட்டை
திருப்பத்தூர்
மதுரை தெற்கு
சாத்தூர்
திருச்செந்தூர்
வாசுதேவநல்லூர் (தனி)
ராதாபுரம்
நாகர்கோவில்
விளவங்கோடு
ஆவடி
திருவண்ணாமலை
தஞ்சாவூர்
திருவாரூர்
அறந்தாங்கி
மானாமதுரை (தனி)
ராமநாதபுரம்
குளச்சல்
பத்மநாபபுரம்
ராசிபுரம் (தனி)

பாமக போட்டியிடும் 18 தொகுதிகள்

சேலம் மேற்கு
சேலம் வடக்கு
தருமபுரி
பென்னாகரம்
விக்கிரவாண்டி
சோளிங்கர்
திருப்போரூர்
உத்திரமேரூர்
ஜெயங்கொண்டம்
விருதாச்சலம்
மயிலாடுதுறை
செஞ்சி
போளூர்
கிழ் வேளூர் (தனி)
ரிஷிவந்தியம்
காட்டுமன்னார்கோயில் (தனி)
பெரம்பூர்
அம்பத்தூர்

அமமுக போட்டியிடும் 11 தொகுதிகள்:

பெரியகுளம் (தனி)
மன்னார்குடி
திருவையாறு
காரைக்குடி
திருப்பத்தூர்
நாங்குநேரி
ஒட்டபிடாரம் (தனி)
திருச்சி மேற்கு
சைதாப்பேட்டை
பூந்தமல்லி (தனி)
மடத்துகுளம்

தமாகா போட்டியிடும் 5 தொகுதிகள்:

ஒட்டன்சந்திரன்
ஈரோடு மேற்கு
ராணிப்பேட்டை
கிள்ளியூர்
கும்பகோணம்.

ஐஜேகே போட்டியிடும் 2 தொகுதிகள்:

பல்லாவரம்
குன்னம்

தமமுகவுக்கு ராஜபாளையம் தொகுதியும், புரட்சிபாரதம் கட்சிக்கு கீழ்வைத்தியனான் குப்பம் தொகுதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் பொதுச்செயலாளர் சஸ்பெண்ட்

சென்னை, மார்ச்.26-

தமிழக சட்டசபை தேர்தல் ஏப்ரல் மாதம் 23ந் தேதி நடைபெற உள்ளதை முன்னிட்டு, அதற்கான வேட்புமனு தாக்கல் வரும் 30ந் தேதி தொடங்க இருக்கிறது. சட்டசபை தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை மே 4ம் தேதி நடைபெற்று, அதே நாளில் தேர்தல் முடிவுகளும் அறிவிக்கப்பட உள்ளது.

இந்த சூழலில் தேர்தலில் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி அமைக்க த.வெ.க. பேச்சுவார்த்தை நடத்தியதாக தகவல்கள் வெளியானது. இருப்பினும், கடைசி நேரத்தில் திமுகவுடன் காங்கிரஸ் தொகுதி பங்கீடு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டதால், த.வெ.க. தனித்துப் போட்டியிடுவதாக அறிவித்தது.

இதனிடையே சமீபத்தில் பொதுக்கூட்ட மேடையில் பேசிய த.வெ.க. நிர்வாகி ஆதவ் அர்ஜுனா, "தி.மு.க.விடன் பணத்தை வாங்கிக் கொண்டு சில காங்கிரஸ் நிர்வாகிகள் கூட்டணி அமைத்துள்ளனர். காங்கிரஸ் ஒன்றுமில்லாமல் ஆகிவிட்டதால், அக்கட்சியின் நிர்வாகிகள் த.வெ.க.வில் இணைய வாசலில் காத்துக் கொண்டுள்ளனர். இரண்டு நாட்களில் காங்கிரஸ் நிர்வாகிகள் பலர் த.வெ.க.வில் இணைய உள்ளனர்" என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் தமிழ்நாடு காங்கிரஸ் பொது செயலாளர் டி. செல்வத்தை சஸ்பெண்ட் செய்து மாநில தலைவர் செல்வப்பெருந்தகை உத்தரவிட்டுள்ளார். கட்சியின் கட்டுப்பாட்டை மீறி செயல்பட்டதால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# மானாமதுரை அருகே உரிய ஆவணமின்றி கொண்டு வந்த ரூ. 1 லட்சம் பறிமுதல்



மானாமதுரை மார்ச். 26-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருப்பாச்சேத்தி சுங்கச்சாவடி அருகே தேர்தல் பறக்கும் படையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். நேற்று முன்தினம் (24.03.2026) இரவு சுமார் 8.50 மணியளவில், அந்த வழியாக வந்த TN 65 BB 7696 (Suzuki TourS) என்ற எண்ணுள்ள வாகனத்தை பறக்கும் படை அதிகாரி வினோத் ராஜா தலைமையிலான குழுவினர் தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர்.

அப்போது, வாகனத்தில் வந்த ரமேஷ் குமார் மகன் ராஜ்குமார் என்பவர் உரிய ஆவணங்கள் ஏதுமின்றி 1,00,000 ரூபாய் (ஒரு லட்சம்) ரொக்கப் பணத்தைக் கொண்டு சென்றது கண்டறியப்பட்டது. முறையான ஆவணங்கள் இல்லாததால், அந்தப் பணத்தை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். பறிமுதல் செய்யப்பட்ட ரொக்கப்பணம் உடனடியாக மானாமதுரை துணை கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டது.

துணை முதல்வர் வருகையை ஒட்டி தீவிர சோதனை:

இதற்கிடையில், தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வருகையை முன்னிட்டு, பூவந்தி சோதனைச் சாவடி உள்ளிட்ட முக்கிய பகுதிகளில் தேர்தல் பறக்கும் படை அதிகாரி வினோத் ராஜா மற்றும் குழுவினர் இன்றும் தீவிர கண்காணிப்பு மற்றும் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

# மானாமதுரை சம்பவம்: 19வது நாளாக நீடிக்கும் சோகம் - ஆகாஷ் உடலைப் பெற மறுக்கும் உறவினர்கள்



மானாமதுரை மார்ச். 26-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் போலீஸ் விசாரணையின் போது தாக்கப்பட்டதாகக் கூறப்படும் கிருஷ்ணராஜபுரம் இளைஞர் ஆகாஷ் உயிரிழந்து இன்றுடன் 19 நாட்கள் ஆகின்றன. எனினும், அவரது உடல் இன்னும் மதுரை அரசு மருத்துவமனை மார்ச்சுவரியிலேயே வைக்கப்பட்டுள்ளது.

பின்னணி: கடந்த மார்ச் 8ம் தேதி, மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி ஆகாஷ் உயிரிழந்தார். முன்னதாக, வெட்டு வழக்கு ஒன்றில் கைது செய்யப்பட்ட ஆகாஷை போலீஸார் தாக்கியதில் அவரது கால் எலும்பு முறிந்ததாகவும், அதன் காரணமாகவே அவர் உயிரிழந்ததாகவும் குடும்பத்தினர் குற்றம் சாட்டுகின்றனர்.

உறவினர்களின் பிடிவாதம்: நீதிமன்ற உத்தரவின்படி பிரேதப் பரிசோதனை செய்யப்பட்ட போதிலும், கீழ்க்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி குடும்பத்தினர் உடலை வாங்க மறுத்து வருகின்றனர்: * இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய போலீஸாரைக் கைது செய்ய வேண்டும்.

* உரிய இழப்பீடு வழங்கப்பட வேண்டும். இதன் காரணமாக, 18 வது நாளாக உடலைப் பெறாமல் உறவினர்கள் போராடி வருகின்றனர்.

சி.பி.சி.ஐ.டி. விசாரணை தீவிரம்: இச்சம்பவம் குறித்து சி.பி.சி.ஐ.டி. போலீஸார் கொலை வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். ஏற்கனவே மானாமதுரை துணை போலீஸ் சூப்பிரண்டு ராஜா, இன்ஸ்பெக்டர்கள் திலீபன், குமாரவேல்பாண்டியன் உட்பட 11 போலீஸாருக்கு சம்மன் அனுப்பப்பட்டு, இரண்டு கட்டங்களாக விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

காவலில் இருந்தபோது சித்திரவதை நடந்ததா என்பது குறித்தும், பிரேதப் பரிசோதனை அறிக்கையின் அடிப்படையிலும் சி.பி.சி.ஐ.டி. அதிகாரிகள் தொடர்ந்து ஆதாரங்களைச் சேகரித்து வருகின்றனர்.

அடுத்தகட்ட நடவடிக்கை:

மதுரை உயர்நீதிமன்றம் இந்த விவகாரத்தைக் கண்காணித்து வருவதாலும், வரவிருக்கும் தேர்தலை முன்னிட்டும், அமைதியை நிலைநாட்ட போலீஸார் விரைவில் அடுத்தகட்ட சட்ட நடவடிக்கைகளை எடுப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. உறவினர்கள் சம்மதித்தால் மட்டுமே உடல் ஒப்படைக்கப்படும் என மருத்துவமனை தரப்பு தெரிவித்துள்ளது.



■ கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக் மற்றும் நகர செயலாளர் எம்.இராமசாமி முன்னிலையில், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் விஜயராஜ் ஏற்பாட்டில், குன்னூர் நகர பகுதியை சேர்ந்த அ.ம.மு.க. கிளை செயலாளர் ஜெகன் உட்பட மாற்றுக் கட்சியை சேர்ந்த உறுப்பினர்கள் திமுகவில் தங்களை இணைத்துக் கொண்டனர், நிகழ்ச்சியில் மாவட்ட கழக துணை செயலாளர் தமிழ்செல்வன், விளையாட்டு மேம்பாட்டு அணி மாநில துணை செயலாளர் மு.வாசிம் ராஜா, பொதுக்குழு உறுப்பினர் சதக்கத்துல்லா, நகர அவைத்தலைவர் தாஸ் வி.சி., மாவட்ட பிரதிநிதி எஸ்.மணிகண்டன் வி.சி., தலைமைக் கழக பேச்சாளர் மாவட்ட சுற்றுச்சூழல் அணியின் தலைவர் ஜாஹீர்உசேன் , நகர இளைஞரணி அமைப்பாளர் சையது மன்சூர் கிளைக்கழக செயலாளர்கள் ஜாஹீர், துரைராஜ், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் ஹரி, நகரமன்ற உறுப்பினர் வசந்தி, நகர இளைஞரணி துணை அமைப்பாளர் பிரவீன், கழக நிர்வாகிகள் சகாயநாதன், ராஜேஷ் குமார், பாலசந்திரன், வினித், சிஜுமோன், மெல்வின் ஜோசப் உள்ளிட்டோர் கலந்துக்கொண்டனர்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்2026 நடைபெறுவதை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், தேர்தலில் 100 சதவிகிதம் வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில், வீட்டு பயன்பாட்டிற்கான எரிவாயு உருளையில் "ஏப்ரல் 23 அன்று 100% தவறாமல் வாக்களிப்போம், என் வாக்கு விற்பனைக்கு அல்ல" என்ற உறுதிமொழி அடங்கிய ஒட்டு வில்லைகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார், நேற்று வில்லைகளை ஒட்டி, விழிப்புணர்வு ஏற்படுத்தினார். உடன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கவிதா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# பெண்ணைக் கொலை செய்து குவாரி குட்டையில் வீசிய இளைஞர் கைது சிவகங்கை போலீஸ் அதிரடி

திருப்புவனம், மார்ச் 26-

சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் காணாமல் போனதாகப் புகார் அளிக்கப்பட்ட பெண், அடித்துக் கொலை செய்யப்பட்டு குவாரி குட்டையில் வீசப்பட்ட அதிர்ச்சித் தகவல் சிவகங்கை மாவட்ட காவல் துறையின் விசாரணையில் தெரியவந்துள்ளது. இது தொடர்பாக மதுரையைச் சேர்ந்த வாலிபர் ஒருவரைப் போலீஸார் கைது செய்துள்ளனர்.

வழக்கின் பின்னணி:

சொட்டத்தட்டி கிராமத்தைச் சேர்ந்த நிறைகுளத்தான் (66), கடந்த பிப்ரவரி மாதம் தனது சகோதரி சரஸ்வதி (52) என்பவரைக் காணவில்லை எனத் திருப்புவனம் காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தார். இது தொடர்பாக பிப்ரவரி 17ஆம் தேதி காணாமல் போனோர் பிரிவின் கீழ் (Crime No. 48/26) வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது.

விசாரணையில் வெளியான திடுக்கிடும் உண்மைகள்:

இந்த வழக்கில் போலீஸார் நடத்திய தீவிர விசாரணையில், காணாமல் போன சரஸ்வதி, மதுரை மாவட்டம் திருமங்கலம் தாலுகா கூடக்கோவில் கிராமத்தைச் சேர்ந்த சரவணகுமார் (21) என்பவருடன் தொடர்பில் இருந்தது தெரியவந்தது.

இதையடுத்து சரவணகுமாரைப் பிடித்துப் போலீஸார் விசாரித்தபோது, அவர் உண்மையை ஒப்புக்கொண்டார். கடந்த பிப்ரவரி 11ஆம் தேதி சரஸ்வதியைத் தனது பண்ணைக்கு அழைத்துச் சென்றதாகவும், அங்கு திருமணம் தொடர்பான பிரச்சினையில் இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் கூறினார். இதில் ஆத்திரமடைந்த சரவணகுமார், சரஸ்வதியைத் தாக்கி கொலை செய்துள்ளார். பின்னர் ஆதாரங்களை மறைப்பதற்காக, அருகில் இருந்த ஆழமான கல் குவாரி குட்டையில் உடலை வீசியது விசாரணையில் தெரியவந்தது.

உடல் மீட்பு மற்றும் நடவடிக்கை:

சம்பவ இடத்தை அடையாளம் கண்ட போலீஸார், கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதத்தைக் கைப்பற்றினர். குவாரி குழி மிகவும் ஆழமாக இருந்ததால், சென்னையிலிருந்து சிறப்பு டைவிங் குழு (Diving Team) வரவழைக்கப்பட்டு உடலை மீட்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.


கைது செய்யப்பட்ட சரவணகுமார் மீது கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் மதுரை மாவட்ட எல்லைக்குட்பட்ட பகுதியில் நடந்திருப்பதால், மேல் விசாரணைக்காக இந்த வழக்கு மதுரை மாவட்ட காவல் துறைக்கு மாற்றப்பட்டுள்ளது.

# அதிமுக கூட்டணியில் பாஜக போட்டியிடும் 27 தொகுதிகளின் விவரத்தை வெளியிட்ட அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ்

சென்னை, மார்ச்.26-

மயிலாப்பூர் தளி முடக்குறிச்சி உதகமண்டலம் அவிநாசி திருப்பூர் தெற்கு கோவை வடக்கு கந்தர்வக்கோட்டை புதுக்கோட்டை திருப்பத்தூர் மதுரை தெற்கு சாத்தூர் திருச்செந்தூர் வாசுதேவநல்லூர் ராதாபுரம் நாகர்கோவில் விளவங்கோடு ஆவடி திருவண்ணாமலை தஞ்சாவூர் திருவாரூர் அறந்தாங்கி மானாமதுரை *ராமநாதபுரம்* குளச்சல் பத்மநாபபுரம் ராசிபுரம் தனி

# திருவையாறு பகுதியில் இரட்டை இலை சின்னம் எங்கே




தஞ்சாவூர் மார்ச் 26-

தஞ்சை மாவட்டத்தில்NDA கூட்டணியில் உள்ள கட்சிகளுக்கு அதிமுக தலைமை இரண்டு முறை நாடாளுமன்ற தேர்தலிலும் ஒரு முறை திருவையாறு தொகுதி கூட்டணி கட்சிகளுக்கே வழங்கியதுஇந்த நிலையில் NDA கூட்டணியில் உள்ள அம்மா முன்னேற்றக் கழகத்திற்கு திருவையாறு தொகுதிக்கு அதிமுக சீட் ஒதுக்கியதாக கூறப்பட்ட நிலையில் திருவையாறு, திருக்காட்டுப்பள்ளி, கண்டியூர், உள்ளிட்ட பொதுமக்கள் கூடும் பொது இடங்களில் சுவர்களில் இரட்டை இலை சின்னம் எங்கே என்றும் திருவையாறு தொகுதியில்கடந்த மூன்று தேர்தல்களில்

இரட்டை இலை சின்னம் போட்டியிட முடியாமல் தடுக்கும் துரோகியிலே என்றும் இரட்டை இலை சின்னம் இல்லை என்றால் கூட்டணி கட்சிக்கு வாக்களிக்க மாட்டோம் என்றும் இப்படிக்கு அதிமுக உண்மை தொண்டன் என்று ஒட்டப்பட்டிருக்கும் போஸ்டர்களால் பொதுமக்கள் இடையே பெரும் பரபரப்பு ஏற்படுத்தி வருகிறது.



■ கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதி, கிருஷ்ணகிரி மத்திய ஒன்றியம், ஜாகீர்வெங்கடாபுரம், லைன்கொள்ளை ஊராட்சியில் 50க்கும் மேற்பட்ட மாற்றுக் கட்சியினர், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் பர்கூர் சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் எம் எல் ஏ முன்னிலையில் திமுகவில் இணைந்தனர். மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் அன்பரசு, ஒன்றிய செயலாளர் விசி.மகேந்திரன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, திண்டுக்கல் மாவட்டத்தில் 7 சட்டமன்ற தொகுதிகளுக்கு அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணிக்கை மையத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.அருகில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரதீப், தேர்தல் பொது பார்வையாளர்கள் திரு.தினேஷ்ஜெயின், சேஷகிரி பாபு, , காவல்துறை பார்வையாளர் யுவராஜ், உதவி ஆட்சியர் (பயிற்சி) ச.வினோதினி, , உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெயபாரதி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கங்காதாரணி உட்பட பலர் உள்ளனர்.

## சமையல் எரிவாயு சிலிண்டர் முன்பதிவுக்கான இடைவெளி

# 35 நாட்களாக அதிகரிக்கப் பட்டதால் மக்கள் அதிர்ச்சி

சென்னை, மார்ச். 26-

சிலிண்டர் முன்பதிவு இடைவெளி 35 நாட்களாக அதிகரிப்பு என்று பாரத் பெட்ரோலியம் நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுக்கு குறுஞ்செய்தி அனுப்பியது. சமையல் எரிவாயு சிலிண்டர் முன்பதிவுக்கான இடைவெளி 35 நாட்களாக அதிகரிக்கப்பட்டதால் மக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். ஏற்கனவே சிலிண்டர் தட்டுப்பாடு நிலவும் நிலையில் முன்பதிவுக்கான அவகாசம் நீட்டிப்பால் வாடிக்கையாளர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். நகர்ப்புறங்களில் 25 நாட்கள், கிராமப்புறங்களில் 45 நாட்கள் இடைவெளியில் சிலிண்டர் முன்பதிவு செய்யலாம் என்று ஒன்றிய அரசு அறிவித்துள்ளது.Long Distance Bus & Rail

ஒன்றிய அரசு அறிவிப்பை நம்புவதா? அல்லது கேஸ் ஏஜென்சி அனுப்பிய தகவலை நம்புவதா? என்று வாடிக்கையாளர்கள் குழப்படமடைந்துள்ளனர். சிலிண்டர் இல்லாமல் தவிக்கும் நகர்புற மக்கள் 35 நாட்கள் காத்திருந்தே முன்பதிவு செய்ய முடியும் என்கிற நிலை இருக்கிறது. இதுபற்றி எண்ணெய் நிறுவனங்களுக்கு ஒன்றிய அரசு அறிவுறுத்தல்களை வழங்கி நிலைமையை சரிசெய்ய வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 வாக்கு எண்ணும் மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத் சிங் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்





தேனி மார்ச். 26-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 20268 முன்னிட்டு, கொடுவிலார்பட்டி தேனி கம்மவார் சங்கம் கல்லூரியில் 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் மையத்தினை தேர்தல் பொதுப் பார்வையாளர்கள்.பீம் சிங்.வினய் பிரதாப் சிங், மற்றும் காவல் பார்வையாளர். சிவப்பிரகாஷ் தேவராஜ், ஆகியோர் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத் சிங், முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 வருகின்ற 23.04.2026 அன்று நடைபெற உள்ளது. தேனி மாவட்டத்தில் 198.ஆண்டிபட்டி, 199.பெரியகுளம். 200.போடிநாயக்கனூர். 201.கம்பம் ஆகிய 4 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் மையம் கொடுவிலார்பட்டியில் உள்ள தேனி கம்மவார் சங்கம் பொறியியல் கல்லூரியில் அமைக்கப்பட உள்ளது.

அதனடிப்படையில், வாக்கு எண்ணும் மையத்தில் தபால்வாக்கு எண்ணும் அறைகள், வாக்குப்பதிவு இயந்திரங்கள் தனித்தனியாக வைப்பதற்கான பாதுகாப்பு வைப்பறைகள், வாக்கு எண்ணுவதற்கான அறைகள். கட்டுப்பாட்டு அறைகள் என இந்திய தேர்தல் ஆணையத்தால் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளதா என நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண் டார்கள்.மேலும், வாக்கு எண்ணும் மையத்தில் தடையில்லா மின்சார வசதி, தேவையான குடிநீர் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அமைப்பது குறித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கேட்டறிந்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்பட்டுவரும் தேர்தல் கட்டுப்பாட்டு மையம் மற்றும் ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக்குழு மையத்தினை தேர்தல் பொதுப்பார்வையாளர்கள், காவல் பார்வையாளர் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு. செயல்பாடுகள் குறித்து பணியாளர்களிடம் கேட்டறிந்தார்கள்.

இவ்வாய்வில், மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார். தேர்தல் நடத்தும் அலுவலர் / பெரியகுளம் சார் ஆட்சியர். ரஜத் பீடன், தேர்தல் நடத்தும் அலுவலர் / தனித்துணை ஆட்சியர். கவிதா, தேர்தல் நடத்தும் அலுவலர் /மாவட்ட வழங்கல் அலுவலர். நல்லையா, தேர்தல் நடத்தும் அலுவலர் உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர்.சையத் முகைதீன் இப்ராஹிம், வட்டாட்சியர் (தேர்தல்).சுருளி மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் /வட்டாட்சியர்கள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# மாநகர செயலாளர் தாம்பரம் சட்டமன்றத் உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் திருவுருவ படம் திறப்பு



தாம்பரம் மார்ச். 26-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகர வர்த்தக அணியின் துணை அமைப்பாளரும் முன்னாள் கவுன்சிலருமான இரா.செல்வகுமார் அவர்களின் தம்பி SIVET கல்லூரி முன்னால் சேர்மன் இரா.ரவிகுமார் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு மாநகர செயலாளர் தாம்பரம் சட்டமன்றத் உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் திருவுருவ படத்தை திறந்து வைக்க உள்ளார்.

தாம்பரம் மாநகர வர்த்தக அணியின் துணை அமைப்பாளர் முன்னாள் கவுன்சிலர் இரா. செல்வகுமார் அவர்களின் உடன் பிறந்த தம்பி கௌவுரிவாக்கம் SIVET கல்லூரியின் முன்னால் மாணவ தலைவர் (சேர்மன்) இரா.ரவிகுமார் அவர்கள் கல்லூரி ஆண்டு விழாவிற்கு கழக தலைவர் டாக்டர் முத்தமிழறிஞர் அவர்களை கல்லூரிக்கு அழைத்து வந்து மாபெரும் விழா எடுத்து தலைவர் கலைஞர் அவர்களின் உரையின் போது இவ்வளவு பெரிய நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து பல சிரம்களுக்கு மத்தியில் என்னையும் அழைத்து வந்து சிறப்பாக செயல்பட்ட இந்த கல்லூரியின் மாணவர்களின் தலைவர் கழகத்தின் மீது மாறாத பற்று கொண்டு துடிப்புடன் செயலற்றிய சேர்மன் இரா. ரவிகுமார் அவர்களை வாழ்த்தி மகிழ்கிறேன் என்று குறிப்பிட்டார்

அந்த இரா.ரவிகுமார் அவர்கள் கடந்த 11/3/26 புதன்கிழமை உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் இயற்கை எய்தினார்

அதை தொடர்ந்து வருகின்ற 26/3/26 அன்று வியாழகிழமை மாலை 5 மணியளவில் மேற்கு தாம்பரம் அரங்கநாதபுரம் 2 வது தெருவில் உள்ள அன்னாரது இல்லத்தில் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட அன்னாரது திருவுருவ படத்தை தாம்பரம் மாநகர செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா அவர்கள் திறந்து வைக்க உள்ளார் இந்த நிகழ்ச்சியில்

கழக நிர்வாகிகளும் உள்ளாட்சி மக்கள் பிரதிநிதிகளும் கழக முன்னோடிகளும் கழக தோழர்களும் கூட்டணி கட்சி நிர்வாகிகளும் பொது மக்களும் கலந்து கொண்டு மலர்தூவி வணங்கிட உள்ளனர்

# போத்தாபுரம் கிராமத்தில் கும்பாபிஷேகம் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டனர்



கிருஷ்ணகிரி, மார்ச். 26-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் அருகே உள்ள போத்தாபுரம் கிராமத்தில் ஸ்ரீமாரியம்மன் ஸ்ரீ காளியம்மன் ஆலய நூதன அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. முன்னதாக ஊர் கவுண்டர் குப்புசாமி தலைமையில் காவேரிப்பட்டணம் தென்பெண்ணை ஆற்றில் இருந்து ஆற்றில் சுவாமிக்கு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு காவடியாட்டம், மயிலாட்டம் ஒயிலாட்டத்துடன் புனிதநீர் எடுத்துவரப்பட்டது.இந்நிகழ்ச்சியில் ஏராளமான பெண்கள் பால்குடம் எடுத்து வந்தனர். இதை தொடர்ந்து முளைப்பாரி இடுதல்,கொடியேற்றுதல், கங்கணம் கட்டுதல் நிகழ்ச்சியும் நடைபெற்றது.சுவாமிக்கு சிவாகம சிரோன்மணி மோகன்குமாரசிவம் குருக்களால்

இரண்டம் யாகசாலை பூஜை, 108 மூலிகை ஹோமம், மஹா அபிஷேகம், அலங்காரம், மஹா தீபராதனை செய்யப்பட்டு

கும்பாபிஷேகம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் போத்திரம் மற்றும் எர்ர அள்ளி, ஜவான் கொட்டாய் ஹாசிப்போர்டு உள்ளிட்ட பல்வேறு கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் மற்றும் ஊர் கவுண்டர்கள், கூம்பு கவுண்டர்கள், பூசாரிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச் சியின் முடிவில் கும்பாபிஷேகத்திற்கு வந்திருந்த பக்தர் களுக்கும்,பொதுமக்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.





■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்2026 "தேர்தல் திருவிழா தமிழகத்தின் பெருவிழா" நடைபெறுவதை முன்னிட்டு வாக்காளர்கள் 100% வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில், கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு அரங்கில், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுவினர் கலந்துக்கொண்ட இரு சக்கர வாகன விழிப்புணர்வு பேரணி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை, ஒசூர் மாநகராட்சி ஆணையர் முகமது ஷபீர் ஆலம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



# கோவிலடி பெருமாள் கோயிலில் பங்குனி உத்திர கொடியேற்றும் விழா

தஞ்சாவூர் மார்ச் 26-

தஞ்சை மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி அருகே கோவிலடியில் கமலவல்லி சமேத அப்பால ரெங்கநாதர் திருக்கோயில் உள்ளது. இக்கோயில் 108 திவ்ய தேசத்தில் 8வது திவ்ய தேசமாகவும், பஞ்சரங்கனில் ஒருவராகவும், நம்மாழ்வாருக்கு மோட்சம் அளித்த ஸ்தலமாகும் விளங்கி வருகின்றது.

இங்கு பங்குனி உத்திர திருவிழா வருடம் தோறும் வெகு விமர்சியாக கொண்டாடப்படுவது வழக்கம்.

அதுபோல இவ்வாண்டும் இன்று கொடியேற்றத்துடன் விழா துவங்கியது.

முன்னதாக கொடி மரத்திற்கு சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு புனித நீர் ஊற்றப்பட்டு சந்தனம், குங்குமம் வைத்து தீபாராதனை காட்டப்பட்டது. அதை தொடர்ந்து கொடியேற்றம் நடந்தது. பூஜையை ராமானுஜம் பட்டாச்சாரியார் மேற்கொண்டார். விழாவில் முக்கிய நிகழ்வாக வரும் 1ம் தேதி தேர் திருவிழாவும் நடக்க உள்ளது.

ஏற்பாடுகளை கோவில் செயல் அலுவலர் பிரகதீஸ்வரன், எழுத்தர் சாமிநாதன், கோவில் பணியாளர்கள், விழா குழுவினர் மற்றும் கிராம மக்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

# அழிஞ்சிவாக்கம் அருள்தரும் விநாயகர் ஆலயத்தில் சங்காபிஷேகம் விழா





மாதவரம், மார்ச். 26-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் அழிஞ்சிவாக்கம் ஊராட்சியில் உள்ள அருள்மிகு அருள்தரும் விநாயகர் ஆலயத்தில் உலக மக்கள் நன்மை வேண்டி 108 சங்காபிஷேகம் விழா ஆலய ஸ்தாபகரும் முன்னாள் அழிஞ்சிவாக்கம் ஊராட்சி மன்ற துணை தலைவருமான செல்விமதுரைமுத்து தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் அருள்தரும் விநாயகர் சுவாமிக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து தீபாரதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் கணபதி ஹோமம் செய்து கலச வழிபாட்டுடன் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இதனைத்தொடர்ந்து விநாயகர்க்கு சுற்றுவட்டார பக்தர்கள் தங்கள் திருகரங்களால் 108 சங்காபிஷேகம் செய்து தங்களின் நேர்த்தி கடனை பூர்த்தி செய்தனர்.மேலும் விநாயகர்க்கு வண்ணமலர்கள் மற்றும் திருஆபரணங்களால் அலங்காரம் செய்யப்பட்டு தூப தீப ஆராதனை காண்பிக்கப்பட்டது.இதில் கிராமபொதுமக்கள், சுற்றுவட்டார பக்தர்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் ஆலயம் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் மற்றும் பிரசாதம் வழங்கினர்.



# வேப்பனப்பள்ளி தொகுதிக்கு கே.பி. முனுசாமி வேட்பாளராக அறிவிப்பு கிருஷ்ணகிரியில் அதிமுகவினர் உற்சாக கொண்டாட்டம்

கிருஷ்ணகிரி, மார்ச். 26-

2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு அதிமுக வெளியிட்ட முதல் கட்ட வேட்பாளர் பட்டியலில், கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனப்பள்ளி சட்டமன்ற தொகுதிக்கு கட்சியின் துணை பொதுச்செயலாளர் கே.பி. முனுசாமி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். இந்த அறிவிப்பு வெளியாகியதையடுத்து, கிருஷ்ணகிரி ரவுண்டானா அருகே அதிமுக நிர்வாகிகள் உற்சாகமாக கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

நகர செயலாளர் கேசவன் தலைமையில் நடைபெற்ற இந்த கொண்டாட்டத்தில், இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் கே.பி.எம். சதீஷ்குமார், ஒன்றிய செயலாளர்கள் கன்னியப்பன், திருமால், மாவட்ட அமைப்புசாரா தொழிலாளர் அணி ஆஜி உள்ளிட்டோர் முன்னிலையில் பட்டாசுகள் வெடித்து இனிப்புகள் வழங்கப்பட்டன.

மேலும், மாவட்ட இளைஞரணி கார்த்திக், மாவட்ட விவசாய அணி செயலாளர் மோகன், பொதுக்குழு உறுப்பினர் வாசுதேவன், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு ஜெயக்குமார், மாவட்ட தொழில்நுட்ப பிரிவு வேலன், மாவட்ட மகளிர் அணி செயலாளர் சுகந்தி மாது, முன்னாள் நகர் மன்ற துணைத் தலைவர் வெங்கடாசலம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு வாழ்த்துகளை தெரிவித்தனர்.

இதில் அதிமுக நிர்வாகிகள் கோவிந்தராஜ், தாபா வெங்கட்ராமன் மற்றும் பாஜக உள்ளிட்ட கூட்டணி கட்சியினரும் திரளாக பங்கேற்று கே.பி. முனுசாமி அறிவிப்பை வரவேற்று உற்சாகத்தை வெளிப்படுத்தினர்.

# ஈரானுக்கு ஒரு மாத ஊதியம்: காஷ்மீர் சுயேச்சை எம்.பி.ரஷீத் அறிவிப்பு



புதுடெல்லி, மார்ச்.26-

ஜம்மு காஷ்மீர் பாரமுல்லா சுயேச்சை எம்.பி. அப்துல் ரஷீத் ஷேக். பொறியாளரான இவர், சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டத்தின் (உபா) கீழ் கைதாகி சிறையில் உள்ளார்.

இவர் காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு உதவியதாகப் புகார்கள் உள்ளன. சிறையிலிருந்தபடி மக்களவை தேர்தலில் வென்ற ரஷீத், நீதிமன்ற அனுமதியுடன் நாடாளுமன்ற கூட்டத்தில் பங்கேற்று வருகிறார்.

அதன்படி, நாடாளுமன்ற மக்களவையில் பட்ஜெட் விவாதத்தில் பங்கேற்று நேற்று அவர் பேசும்போது, "தவறான கொள்கைகளால் இறந்து கொண்டிருக்கும் இஸ்ரேலின் சாதாரண குடிமக்களுக்கு எனது இரங்கலைத் தெரிவித்து கொள்கிறேன்.

ஈரானுக்கு உதவுவதற்காக காஷ்மீர் மக்கள் திரட்டிய கோடிக்கணக்கான ரூபாயையும் பாராட்டுகிறேன். எனது ஒரு மாத எம்.பி.க்கான அரசு ஊதியத்தை 62 மாணவிகள் உயிரிழந்த ஈரானிய பள்ளிக்கு அனுப்ப உள்ளேன்'' என்று தெரிவித்தார்.




# வேப்பனப்பள்ளி தொகுதிக்கு கே.பி. முனுசாமி வேட்பாளர் அறிவிப்பு

## காவேரிப்பட்டினத்தில் அதிமுகவினர் கொண்டாட்டம்

கிருஷ்ணகிரி, மார்ச். 26-

2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு அதிமுக தனது முதல் வேட்பாளர் பட்டியலை நேற்று வெளியிட்டது. இதில் கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனப்பள்ளி சட்டமன்றத் தொகுதிக்கான அதிமுக வேட்பாளராக, கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் கே.பி. முனுசாமி அறிவிக்கப்பட்டுள்ளார்.

இந்த அறிவிப்பைத் தொடர்ந்து காவேரிப்பட்டினம் ஒன்றியம் மற்றும் நகர அதிமுக சார்பில் உற்சாகக் கொண்டாட்டம் நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் பையூர் ரவி மற்றும் நகர செயலாளர் விமல் தலைமையில், பேருந்து நிலையம் அருகே பட்டாசுகள் வெடித்து, பொதுமக்களுக்கும் கட்சி தொண்டர்களுக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன. இதன் மூலம் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் இளம் பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் கே.பி.எம். சதீஷ்குமார், ஒன்றிய செயலாளர் கிருஷ்ணன்,நாகோஜன அள்ளி நகர செயலாளர் அண்ணாதுரை ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட விவசாய அணி செயலாளர் மோகன், ஒன்றிய அம்மா பேரவை செயலாளர் கேசவன், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு ஜெயக்குமார், பொதுக்குழு உறுப்பினர் வாசுதேவன், முன்னாள் கவுன்சிலர் கணேசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும் அதிமுக நிர்வாகிகள் விக்ரம் குமார், பெரியசாமி, மதிவாணன், கணேசன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கோவிந்தராஜ், சரவணன், கார்த்திக் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு, கே.பி. முனுசாமி வெற்றி பெற வேண்டும் என உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

# தமிழ்நாடு பியூட்டி இன்டஸ்ட்ரி தொழில் முனைவோர் சங்கத்தின் 1ஆம் ஆண்டு விழா சிறப்பாக மிக சிறப்பாக நடைபெற்றது







சென்னை மார்ச். 26-

சென்னை கீழ்பாக்கத்தில் உள்ள மார்லேன் மஹாலில்தமிழ்நாடு பியூட்டி இன்டஸ்ட்ரி தொழில் முனைவோர் சங்கத்தின் முதலாம் ஆண்டு விழா கோலாகலமாக நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு சங்கத்தின் தலைவர் இலங்கேஸ்வரி, துணைத் தலைவர்கள் எம்.சினிமோல், சி.பிரபாவதி, செயலாளர் தேவி கார்த்திக், பொருளாளர் கோமதி உள்ளிட்ட நிர்வாகிகள் தலைமையில் இந்த விழா நடைபெற்றது


இதில் சிறப்பு அழைப்பாளராக நேச்சுரல்ஸ் இணை நிறுவனர் சிகே.குமரவேல், பழம் பெரும் அழகு வணிக ஆளுமை பிரேமா நரசிம்ஹன், அகில இந்திய ஹேர் அண்ட் பியூட்டி சங்கத்தின் சார்பாக தேசிய பொதுச் செயலாளர் ஆண்டனி டேவிட், தென்னிந்தியாவின் நிறுவனர் அனு ரமேஷ், தமிழ்நாடு நிறுவனர் சீனா மினி, சின்னத்திரை நடிகர் சங்கத்தின் பொதுச் செயலாளர் நவீன்தர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு இவ்விழாவில் சிறப்புரையாற்றி அதனைத் தொடர்ந்து பியூட்டி துறையில் சிறந்து விளங்கும் தொழில் முனைவோருக்கு பாராட்டு மற்றும் விருதுகள் வழங்கப்பட்டன. பெண்கள் தொழில் முனைவோரின் முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு கருத்தரங்குகள் மற்றும் நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

மேலும், இணைச் செயலாளர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் இணைந்து விழா ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர். தமிழ்நாடு முழுவதும் இருந்து வந்திருந்த தொழில் முனைவோர் மற்றும் நிபுணர்கள் இந்த நிகழ்ச்சியில் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

இந்த ஆண்டு விழா தொழில் வளர்ச்சி, புதிய வாய்ப்புகள் மற்றும் பரஸ்பர ஒத்துழைப்பை வலுப்படுத்தும் முக்கிய மேடையாக அமைந்தது.

மொத்தத்தில், தமிழ்நாடு பியூட்டி இன்டஸ்ட்ரி தொழில் முனைவோர் சங்கத்தின் முதல் ஆண்டு விழா வெற்றிகரமாக நடைபெற்று அனைவரின் பாராட்டையும் பெற்றுள்ளது.

# பழனி தலைமை தபால் நிலையத்தில் ஈமெயில் மூலம் வெடிகுண்டு மிரட்டல்



திண்டுக்கல், மார்ச். 26-

திண்டுக்கல் மாவட்டம் பழனி தலைமை தபால் நிலையத்திற்கு மின்னஞ்சல் (Email) மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தபால் மாஸ்டர் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர் பின்பு மிரட்டல் வந்ததையடுத்து, பாதுகாப்பு கருதி தபால் நிலையத்தில் இருந்த ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டனர்

சோதனை மற்றும் முடிவு

மிரட்டல் குறித்து தகவல் அறிந்தவுடன், பழனியில் இருந்து வெடிகுண்டு கண்டறியும் நிபுணர்கள் (BDDS) சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர்.

தபால் நிலையத்தின் அனைத்து அறைகள், பார்சல் பிரிவுகள் மற்றும் வளாகம் முழுவதும் தீவிர சோதனை நடத்தப்பட்டது.

நீண்ட நேர சோதனைக்குப் பிறகு, அங்கு வெடிகுண்டு ஏதும் இல்லை என்பதும், அந்த மிரட்டல் வெறும் புரளி என்பதும் உறுதி செய்யப்பட்டது.

பொய்யான தகவலை அனுப்பி பீதியை ஏற்படுத்திய நபர் யார் என்பது குறித்து சைபர் க்ரைம் போலீசாரின் உதவியுடன் பழனி போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். பொதுவாக இது போன்ற மிரட்டல்கள் பொது அமைதிக்கு குந்தகம் விளைவிப்பதற்காக செய்யப்படுகின்றன எனக்கூறி வருகின்றனர்




# பழனி வட்டாட்சியர் அலுவலக ஸ்டாங் ரூமில் இ விஎம் மிஷின் போலீஸ் ஏந்திய பாதுகாப்புடன் வைக்கப்பட்டது

திண்டுக்கல், மார்ச். 26-

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து பழனிக்கு வாக்குப்பதிவு இயந்திரம் கொண்டு வரப்பட்ட இந்த இயந்திரங்கள், கண்ட்ரோல் யூனிட் 406. பூத் யூனிட் 406 இ விஎம் 440 போன்றவைகள் பழனி வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள தனி பாதுகாப்பு அறையில் ஸ்டாங் ரூம்பில் வைக்கப்பட்டுள்ளன. இதற்கு 24 மணி நேர துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு வழங்கப்படுகிறது. அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் முன்னிலையிலேயே இந்த அறைகள் திறக்கப்பட்டு இயந்திரங்கள் உள்ளே வைக்கப்பட்ட பின் சீல் (Seal) வைக்கப்பட்டனர். மற்றும் இது தேர்தல் ஆணையத்தின் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்கிறது.

கண்காணிப்பு: பாதுகாப்பு அறை அமைந்துள்ள பகுதியில் சிசிடிவி (CCTV) கேமராக்கள் பொருத்தப்பட்டு, அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருவார்கள்.

# ஹார்முஸ் ஜலசந்தியில் 2 எரிவாயு கப்பல்களுக்கு இந்திய கடற்படை பாதுகாப்பு



புதுடெல்லி, மார்ச்.26-

ஹார்முஸ் ஜலசந்தியை கடந்த 2 எரிவாயு கப்பல்களுக்கு இந்திய கடற்படையின் போர்க்கப்பல் பாதுகாப்பு வழங்கி வருகிறது. அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப்படைகள் மற்றும் ஈரான் இடையிலான போர் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தியில் எண்ணெய் கப்பல் போக்குவரத்து முடங்கி உள்ளது.

ஈரான் ராணுவத்தின் சிறப்பு அனுமதியுடன் ஷிவாலிக், நந்தா தேவி ஆகிய எரிவாயு (எல்பிஜி) கப்பல்கள், ஜக் லட்கி என்ற கச்சா எண்ணெய் கப்பல் ஆகியவை இந்தியா வந்தன. இந்த சூழலில் ஜக் வசந்த், பைன் காஸ் ஆகிய 2 எரிவாயு கப்பல்கள் ஈரான் ராணுவ சிறப்பு அனுமதியுடன் நேற்று முன்தினம் ஹார்முஸ் ஜலசந்தியை கடந்தன.

இந்த கப்பல்கள் நேற்று சர்வதேச கடல் எல்லை பகுதியை வந்தடைந்தன. அவற்றுக்கு இந்திய கடற்படையைச் சேர்ந்த ஒரு போர்க்கப்பல் பாதுகாப்பு வழங்கி வருகிறது. மார்ச் 26 முதல் 28ம் தேதிக்குள் இரு எரிவாயு கப்பல்களும் இந்தியா வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுகுறித்து மத்திய கப்பல் போக்குவரத்து துறை சிறப்பு செயலாளர் ராஜஷ் குமார் சின்ஹா கூறும்போது, "இரு எரிவாயு கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியை கடந்து இந்தியா நோக்கி வந்து கொண்டிருக்கின்றன. இந்த கப்பல்களில் 92,700 மெட்ரிக் டன் எல்பிஜி காஸ் இருக்கிறது'' என்றார்.

இதுகுறித்து மத்திய பெட்ரோலிய துறை வட்டாரங்கள் கூறியதாவது: சமையல் காஸ் தட்டுப்பாட்டை சமாளிக்க உள்நாட்டில் எல்பிஜி உற்பத்தி அதிகரிக்கப்பட்டு உள்ளது. இதன்படி நாள்தோறும் உள்நாட்டில் 55,000 டன் எல்பிஜி உற்பத்தி செய்யப்படுகிறது. ஏற்கெனவே வளைகுடா நாடுகளில் இருந்து 2 எரிவாயு கப்பல்கள் இந்தியா வந்துள்ளன. தற்போது மேலும் 2 எரிவாயு கப்பல்கள் விரைவில் இந்தியா வந்து சேர உள்ளன.

இவை தவிர நெதர்லாந்தில் இருந்து ஹெலாஸ் கிளாடியேட்டர், அமெரிக்காவில் இருந்து காஸ் ஜுபிட்டர் ஆகிய 2 கப்பல்கள் தலா 24,000 டன் எல்பிஜி காஸுடன் இந்தியா வருகின்றன. இவை வரும் 30ம் தேதி விசாகப்பட்டினம் துறைமுகத்தை வந்து சேரும். அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்து அடுத்தடுத்து எல்பிஜி காஸ் கப்பல்கள் இந்தியாவுக்கு வர உள்ளன.

இதேபோல ரஷ்யாவில் இருந்து அதிக அளவில் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகிறது. வளைகுடா பகுதியில் முகாமிட்டுள்ள12க்கும் மேற்பட்ட போர்க்கப்பல்கள், ஹார்முஸ் ஜலசந்தியை கடந்து வரும் இந்திய எண்ணெய் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கி வருகின்றன.இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

# குன்னூர் சார் ஆட்சியர் அலுவலகத்தில் சட்டமன்ற தேர்தல் 2026 மண்டல அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து நடைபெற்ற பயிற்சி

## தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டார்




நீலகிரி, மார்ச்.26-

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு, மண்டல அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து, நீலகிரி மாவட்டம் குன்னூர் சார் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற பயிற்சி வகுப்பினை, மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு, அவர்கள் பார்வையிட்டு, அறிவுரைகளை வழங்கினார்.

இப்பயிற்சியில், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது:தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ஐ முன்னிட்டு தபால் வாக்கு வழிமுறைகள் மற்றும் கையாள வேண்டிய நடைமுறைகள், வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு மற்றும் பயன்படுத்துதல், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் வழிமுறைகள், வாக்குச்சாவடி அலுவலர்களின் பொறுப்புகள், வேட்பு மனு தாக்கலின் விதிமுறைகள் ஆகியவற்றினை குறித்து பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. அதேபோல், டெண்டர் வாக்கு, பிராக்சி வாக்கு, இடிபீஎஸ் ஆகியவற்றை குறித்து நன்றாக தெரிந்து வைத்திருக்க வேண்டும். மேலும், மாதிரி வாக்குப்பதிவுகள் மேற்கொள்ளும் போதும், முடிந்த பின்பும் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து நன்றாக தெரிந்திருக்க வேண்டும். மேலும், எந்தெந்த படிவங்கள் மற்றும் எந்தெந்த பதிவேடுகள் எதற்காக பயன்படுத்த வேண்டும் என்பதனையும் நன்றாக தெரிந்திருக்க வேண்டும். இப்பயிற்சியில் ஏதேனும் சந்தேகங்கள் இருக்கும் பட்சத்தில் அதனை கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக, மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில், மாவட்டத்தில் உள்ள வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கையான 736 வாக்குச்சாவடிகளில் பணியாற்றுவதற்கு ஏதுவாக, வாக்குச்சாவடி அலுவலர்களான PO, POL, POZ, PO3 ஆகியோர்களுக்கு 120 சதவீதம் என மொத்தம் 3,532 அலுவலர்கள் தேர்தல் பணியில் ஈடுபட உள்ளனர். இதற்காக முதல் கட்ட சீரற்றமயமாக்கல் பணியானது (Randomization) இன்று நடைபெற்றது.

இந்நிகழ்வில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், தேர்தல் நடத்தும் அலுவலர் / குன்னூர் சார் ஆட்சியர் சங்கீதா மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) லோகநாயகி, மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) / பயிற்சி அளிக்கும் அலுவலர் .பழனிச்சாமி, தேர்தல் தனி வட்டாட்சியர் திருமதி காயத்ரி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மதுரை மாவட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூ.க்கு தொகுதியே கிடைக்காத சூழல்!




மதுரை. மார்ச். 26-

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு தொகுதிகள் ஒதுக்கீட்டு எண்ணிக்கை குறைந்ததால் இந்த முறை மதுரை மாவட்டத்தில் ஒரு தொகுதியில் கூட போட்டியிட முடியாத சூழல் உருவாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

திமுக கூட்டணியில் கடந்த 2021ம் ஆண்டு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 6 தொகுதிகளில் போட்டியிட்டு கந்தர்வகோட்டை, கீழ்வேளூர் ஆகிய தொகுதிகளில் வெற்றி பெற்றது.

2026ம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, கூடுதல் தொகுதிகளை, திமுகவிடம் கேட்டு வந்தது. ஆனால் திமுகவோ, கடந்த முறை போட்டியிட்டதைவிட ஒரு தொகுதியை குறைத்து வழங்கி கூட்டணி ஒப்பந்தம் கையெழுத்தாகி விட்டது.

முதலில் முரண்டுபிடித்த மார்க்சிஸ்ட் கட்சி, எண்ணிக்கையை விட்டுக் கொடுக்கலாம், கொள்கையை விட்டுக் கொடுக்க முடியாது என்ற அடிப்படையில், அதிமுக பாஜக கூட்டணிக்கு தங்கள் நிலைப்பாடு சாதகமாகிவிடக் கூடாது என்பதற்காக திமுக தலைமை வழங்கிய 5 தொகுதிகளை பெற்றுக்கொண்டது.

தொகுதிகள் எண்ணிக்கை குறைந்துள்ளதால் மதுரை மாவட்டத்தில் இந்த முறை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் போட்டியிடுவது சந்தேகம் என்றும், கடந்த முறை மார்க்சிஸ்ட் போட்டியிட்ட திருப்பரங்குன்றத்தில் இம்முறை திமுகவே களம் இறங்கும் வாய்ப்பு உள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதுகுறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் கூறுகையில், 2021ம் ஆண்டு போட்டியிட்டு வெற்றி பெற்ற கந்தர்வகோட்டை, கீழ்வேளூர் ஆகிய தொகுதிகளையும் சேர்த்து மதுரை, கோவை, சென்னையில் தலா ஒரு தொகுதிகளில் போட்டியிட கட்சி திட்டமிட்டுள்ளது.

எக்காரணம் கொண்டும் மதுரையில் போட்டியிடுவதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தவிர்க்காது. கடந்த முறை பெற்ற ஒரு தொகுதியை பெற்றே தீருவோம். அது எந்த தொகுதி என உறுதியாகவில்லை, என்றனர்.

திமுகவினர் கூறுகையில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு இந்த முறை 5 தொகுதிகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளதால் ஏற்கெனவே எம்எல்ஏக்கள் உள்ள 2 தொகுதிகள், மீதமுள்ள தொகுதிகளை மற்ற மாவட்டங்களில் வழங்குவதற்கு கட்சித்தலைமை முடிவு செய்துள்ளதாக தெரிகிறது. இதனால் மதுரை மாவட்டத்தில் மார்க்சிஸ்ட் போட்டியிடுவது சந்தேகமே' என்றனர்



# கொலம்பியா விமான விபத்தில் 66 வீரர்கள் பலி

பொகோட்டா, மார்ச்.26-

கொலம்பியா நாட்டின் புவேர்ட்டோ லெகுயுஸாமோ பகுதியிலிருந்து நேற்று மாலை ராணுவ வீரர்களை ஏற்றிக்கொண்டு ஹெர்குலஸ் விமானம் ஒன்று புறப்பட்டது. விமானம் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே கட்டுப்பாட்டை இழந்து கீழே விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த கோர விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 66 பேர் உயிரிழந்துள்ளதாக முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து பாதுகாப்பு துறை அமைச்சர் பெட்ரோ ஏ சான்செஸ் கூறுகையில், 'ராணுவ வீரர்கள் பயணித்த விமானம் விபத்துக்குள்ளானது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. விபத்து நடந்த இடத்திற்கு ராணுவ மீட்பு குழுவினர் விரைந்துள்ளனர். உயிரிழந்தவர்களின் சரியான எண்ணிக்கை மற்றும் விபத்துக்கான காரணம் குறித்து இன்னும் அதிகாரப்பூர்வமாக உறுதி செய்யப்படவில்லை' என்று தெரிவித்தார். இந்த விமானத்தில் சுமார் 120 பேர் வரை இருந்ததாக பத்திரிகை செய்திகள் தெரிவிக்கின்றன.
விளையாட்டு செய்தி

இதற்கிடையே கொலம்பியா விண்வெளி படை தனது எக்ஸ் தளத்தில் விடுத்துள்ள செய்தியில், பணியில் இருந்த 6 ஊழியர்கள் உயிரிழந்துவிட்டதாக உறுதிப்படுத்தியுள்ளது. விபத்து நடந்த இடத்தில் மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால் பலி எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என அஞ்சப்படுகிறது. கடந்த பிப்ரவரி மாதம் பொலிவியா நாட்டு விமானப்படைக்கு சொந்தமான ஹெர்குலஸ் ரக விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் டஜன் கணக்கானோர் உயிரிழந்தனர். அந்த துயரம் மறைவதற்குள் தற்போது கொலம்பியாவில் மற்றுமொரு விமான விபத்து நடந்துள்ளது



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுதேர்தல்2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு மதுரை, திண்டுக்கல் மாவட்ட எல்லையான பரளி பார் பகுதியில் பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்புக் குழுவினர் வாகன தணிக்கையில் ஈடுபட்டு வருவதை மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்கள், திண்டுக்கல் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் செ.சரவணன் இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் ஆய்வு செய்து பார்வையிட்டனர். மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே.அர்விந்த் இ.கா.ப.,திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.அ.பிரதீப் இ.கா.ப., ஆகியோர் உடன் உள்ளனர்.



■ தமிழ்நாடு சட்டமன்ற பொதுதேர்தல்2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு மதுரை கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட செட்டிகுளம் கிராமத்தில் நடைபெற்ற மகளிர் சுய உதவிக் குழுக்களின் சமத்துவ பொங்கல் நிகழ்ச்சியில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., தலைமையில் மகளிருடன் இணைந்து கும்மி அடித்து, மாட்டு வண்டியில் பயணம் செய்து என் வாக்கு என் கடமை, 100% வாக்களிப்போம் என்ற விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்தி உறுதிமொழி எடுத்துக்கொண்டார்.

present sale for
all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161